அவசரக் கூட்டம்

கூட்ட எண் – 08 / 2019

திருத்தணி நகராட்சி,
நாள்:17.06.2019

நிகழும் விளம்பி ஆண்டு, ஆனி – 2, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 17.06.2019 திங்கள் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அவசரக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் (ம) ஆணையர்
திருத்தணி நகராட்சி.

பொருள் எண்– 1

திருத்தணி நகரின் மக்கள்தொகை 44781 ஆகும். நகராட்சியின் குடிநீர் ஆதாரமாக உள்ள குசஸ்தலை ஆற்றுப் படுகையில் உள்ள அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்தில் 6 எண்ணிக்கை நீர் உறிஞ்சு கிணறு (Infilteration Well) அமைக்கப்பட்டு ஒவ்வொரு கிணற்றிலும் 5 HP மோட்டார் பொருத்தப்பட்டு இயக்கப்படுகிறது. இவை அனைத்தும் சேகரிப்பு கிணற்றில் (Collection Well) 35 HP மின் மோட்டார் மூலம் நகரிலுள்ள 10 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படும். மின்தடை ஏற்படும் போது DC 75 KVA ஜெனரேட்டர் மூலம் மோட்டார் இயக்கப்படும். இவற்றின் மூலம் இந்நகருக்கு 1.00 MLD நாள் ஒன்றுக்கு பெறப்பட்டு வந்ததது. கடந்த ஆண்டு பருவ மழை காலத்தில் போதுமான அளவு மழை பெய்யாத காரணத்தினால் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள நீர் உறுஞ்சு கிணறுகள் அனைத்தும் வற்றிவிட்டது.இதனால் அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற குடிநீர் முற்றிலும் தடைப்பட்டுள்ளது. மேலும், இந்நகரில் 45 இடங்களில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு, அதன் அருகில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் 1.02 MLD நாள் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் பாலாறு அருகில் திருபாற்கடல் என்னும் இடத்தில் இருந்து அரக்கோணம் திருத்தணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இந்நகருக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 1.50 MLD தர வேண்டியதில் சராசரியாக 1.20 MLD கிடைக்கப் பெறுகிறது.

| வ. எண். | குடிநீர் பெறப்படும் இடங்கள் | பெறப்படும் குடிநீரின் மொத்த அளவு |
|---|---|---|
| 1. | அருங்குளம் குடிநீர் திட்டம்<br>(நகராட்சி மூலம் பராமரிக்கப்படுகிறது.) | 0.00 MLD |
| 2. | அரக்கோணம்–திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம்<br>(தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு 1.50 MLD) | 1.20 MLD |
| 3. | ஆழ்த்துளை கிணறு அமைத்து அதன் அருகில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர் அளவு | 1.02 MLD |
| 4. | 147 கைப்பம்பு மூலம் பெறப்படும் குடிநீர் | 0.20 MLD |
| | **மொத்தம்** | 2.42 MLD |

இந்நகராட்சிக்கு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குடிநீர் தேவை 4.03 MLD தேவைப்படுகின்றது. இந்நகராட்சிக்கு தற்போது (1) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் அரக்கோணம் - திருத்தணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும்

(பாலாறு – நீராதாரம் ) . (2) திருத்தணி நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் அருங்குளம் குடிநீர் திட்டத்தின் மூலமும் ( நீராதாரம் - கொசஸ்தலையாறு ) மற்றும் நகராட்சியில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகள் மூலமும் . நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளில் குடிநீர் வழங்க வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 6 எண்ணிக்கை நீர் உறிஞ்சு கிணறுகள் நீர் வற்றி விட்டதால் அரக்கோணம்–திருத்தணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் பெறப்படும் குடிநீர் 14– வார்டுகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 54 லிட்டர் வீதம் நான்கு நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பெறும் மொத்த மழை அளவு சராசரியாக 1064 மி.மீ. ஆகும். கடந்த ஆண்டு இந்நகராட்சி பெற்ற மொத்த மழை அளவு 820.5 மி.மீ ஆகும்

திருத்தணி நகராட்சியில் 2018–ஆம் ஆண்டு போதுமான அளவு பருவ மழை பெய்யாத காரணத்தினால் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள நீர் உறுஞ்சு கிணறுகள் அனைத்தும் வற்றிவிட்டது மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. கோடை காலத்தை கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு தங்கு தடையின்றி போதுமான அளவு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் கீழ் கண்ட குடிநீர் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | முருகூரில் ஆழ்துளை கிணறு அமைத்து கை பம்பு பொருத்தும் பணி. | **1.00** |
| 2 | திருத்தணி நகராட்சி வார்டு எண்.1 முதல் 7 வரையிலான பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | **10.00** |
| 3 | திருத்தணி நகராட்சி வார்டு எண்.8 முதல் 15 வரையிலான பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 |
| 4 | திருத்தணி நகராட்சி வார்டு எண்.16 முதல் 21 வரையிலான பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 |
| 5 | பாப்பிரெட்டி பள்ளியில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | 1.00 |
| 6 | அமிர்தாபுரம் காலனியில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | 1.00 |
| 7 | அரக்கோணம் சாலையில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | **1.00** |
| 8 | கன்னிகாபுரம் சாலையில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | **1.00** |
| 9 | ஆறுமுகசாமி கோயில் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | **1.00** |
| | **மொத்தம்** | **36.00** |

**அலுலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட குடிநீர் பணிகளை மேற்கொள்ள இயற்கை இடர்பாடுகள் நிவாரன நிதி (Phase – II) ஒதுக்கீடு செய்து தரக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணைஅனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.57/2019/இ1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**அவசரக் கூட்டம்**

**கூட்ட எண் – 09 / 2019** **திருத்தணி நகராட்சி,**
**நாள்: 20.06.2019**

நிகழும் விளம்பி ஆண்டு, ஆனி – 5, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 20.06.2019 வியாழக் கிழமை மாலை 5.30 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அவசரக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

திருத்தணி நகரின் மக்கள்தொகை 44781 ஆகும். நகராட்சியின் குடிநீர் ஆதாரமாக உள்ள குசஸ்தலை ஆற்றுப் படுகையில் உள்ள அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்தில் 6 எண்ணிக்கை நீர் உறிஞ்சு கிணறு (Infilteration Well) அமைக்கப்பட்டு ஒவ்வொரு கிணற்றிலும் 5 HP மோட்டார் பொருத்தப்பட்டு இயக்கப்படுகிறது. இவை அனைத்தும் சேகரிப்பு கிணற்றில் (Collection Well) 35 HP மின் மோட்டார் மூலம் நகரிலுள்ள 10 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படும். இவற்றின் மூலம் இந்நகருக்கு 1.00 MLD நாள் ஒன்றுக்கு பெறப்பட்டு வந்ததது. கடந்த ஆண்டு பருவ மழை காலத்தில் போதுமான அளவு மழை பெய்யாத காரணத்தினால் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள நீர் உறுஞ்சு கிணறுகள் அனைத்தும் வற்றிவிட்டது.இதனால் அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து கிடைக்கப்பெற்ற குடிநீர் முற்றிலும் தடைப்பட்டுள்ளது. மேலும், இந்நகரில் 47 இடங்களில் ஆழ்த்துளை கிணறு அமைக்கப்பட்டு, அதன் அருகில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் 0.88 MLD நாள் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் திருத்தணி நகர மக்களுடைய குடிநீர் பிரச்சினையை தீர்க்க பாலாறு அருகில் திருபாற்கடல் என்னும் இடத்தில் இருந்து அரக்கோணம் திருத்தணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இந்நகருக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 1.50 MLD தர வேண்டியதில் சராசரியாக 1.00 MLD கிடைக்கப் பெறுகிறது.

இந்நகராட்சிக்கு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குடிநீர் தேவை 4.03 MLD தேவைப்படுகின்றது. இந்நகராட்சி பெறும் மொத்த மழை அளவு சராசரியாக 1064 மி.மீ. ஆகும்.

இந்நகராட்சிக்கு தற்போது (1) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் அரக்கோணம் - திருத்தணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும் (பாலாறு – நீராதாரம்) . (2) திருத்தணி நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் அருங்குளம் குடிநீர் திட்டத்தின் மூலமும் ( நீராதாரம் - கொசஸ்தலையாறு ) மற்றும் நகராட்சியில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகள் மூலமும் தற்போது குடிநீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 51 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது.

அரக்கோணம் திருத்தணி கூட்டு குடிநீர் திட்டத்தில் அரக்கோணத்தில் அமைந்துள்ள நீருந்து நிலையத்தில் இருந்து திருத்தணி நகரில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றும் பிரதான குழாயில் (200 mm AC Pipe) குடிநீர் அழுத்த மாறுபாடு காரணமாக அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால் தொடர்ந்து நீரேற்றம் செய்யும் பணி தடைபடுகிறது, மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உடைப்பினை சரி செய்வதற்கு காலதாமதம் ஏற்படுவதுடன் பராமரிப்பு செலவும் கூடுதலாகிறது இதனால் நகராட்சி பகுதியில் குடிநீர் வழங்கும் கால அளவு இடைவெளியும் கூடுதலாகிறது. எனவே அரக்கோணம் – திருத்தணி கூட்டு குடிநீர் திட்டத்தில் அரக்கோணத்தில் அமைந்துள்ள நீருந்து நிலையத்தில் இருந்து சுமார் 14 கீ.மீ தூரத்தில் உள்ள திருத்தணி நகரில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை அமைக்கப்பட்டுள்ள 200 mm AC Pipe நீரேற்றும் பிரதான குழாயினை DI Pipe –ஆக மாற்றம் செய்திட கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், (அரக்கோணம் – திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம்), வேலூர் – 632 006– மூலம் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரக்கோணம் – திருத்தணி கூட்டு குடிநீர் திட்டத்தில் அரக்கோணத்தில் அமைந்துள்ள நீருந்து நிலையத்தில் இருந்து சுமார் 14 கீ.மீ தூரத்தில் உள்ள திருத்தணி நகரில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை அமைக்கப்பட்டுள்ள 200 mm AC Pipe நீரேற்றும் பிரதான குழாயினை DI Pipe –ஆக மாற்றம் செய்திட கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், (அரக்கோணம் – திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம்), வேலூர் – 632 006– மூலம் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்திட கடிதம் எழுத மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.55/2019/இ1)

**பொருள் எண்– 2**

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகளுக்கு 20.06.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 | 1. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர்<br>3.40 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்<br>3.00 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | வார்டு எண்.20– சாய்பாபா நகரில் பழுதடைந்த கால்வாய் மற்றும் சிறுபாலத்தினை சீரமைத்தல் பணி. | 1.12 | 1. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர்<br>1.83 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்<br>0.50 % மதிப்பீட்டை விட அதிகம்<br>3.திரு.எம்.விஜயன், ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டிற்கு சமம் |

| | | | |
|---|---|---|---|
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டித் தெரு மற்றும் பழைய தர்மராஜா கோவில் தெருவில் பழுதடைந்த சிமெண்ட் சாலையினை சீரமைத்தல் பணி. | 0.75 | 1. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 0.50 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர் 0.31 % மதிப்பீட்டை விட அதிகம்<br>3.திரு.எம்.விஜயன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டிற்கு சமம் |

அலுவலக குறிப்பு :–

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 3**

இந்நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்களுக்கு 2019–20–ஆம் ஆண்டு மோட்டார் சைக்கிள் வாங்க முன்பணம் வழங்ககோரி விண்ணப்பிக்கும் பணியாளர்களுக்கு அரசு ஆணை எண்.719 நிதி துறை நாள்13.10.1993, 485 நிதி துறை நாள்.13.01.2005 மற்றும் 467 நிதி (சம்பளம்) துறை நாள்.22.09.2009–ன் படி வாகனம் வாங்க ரூ.5.00 லட்சம் முன்பணம் வழங்கவும் இதனால் ஏற்படும் செலவினத்தை திருத்திய நிதி நிலை அறிக்கையில் சேர்க்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1704/2018/சி1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

## சாதாரணக் கூட்டம்

**கூட்ட எண் – 10 / 2019** **திருத்தணி நகராட்சி,**
**நாள்: 28.06.2019**

நிகழும் விகாரி ஆண்டு, ஆனி – 13, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 28.06.2019 வெள்ளிக் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் சாதாரணக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

ஆணையர் அவர்களின் மே – 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு : –**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 2**

திருத்தணி நகராட்சியின் பிறப்பு, இறப்பு பதிவுகள் மற்றும் இறந்து பிறந்தவை பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவை |
|---|---|---|---|---|
| 1 | மே – 2019 | 44 | 23 | – |

**அலுவலக குறிப்பு : –**
மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 3**

இந்நகராட்சியின் வரி மற்றும் வரியில்லாயினங்களின் வரவினம் மற்றும் செலவினம் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | வரவுகள் (ரூ.இலட்சம்) | செலவு சீட்டு எண். | செலவுகள் (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| மே – 2019 | 37.84 | SFC A/c 18 முதல் 28 வரை | 5.91 |
| | | RF A/c 18 முதல் 29 வரை | 19.80 |
| | | CF A/c 19 முதல் 24 வரை | 34.43 |
| | 1.10 | Amma A/c 7 to 10 வரை | 1.58 |

**அலுவலக குறிப்பு :–**
மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண்– 4

இந்நகராட்சி எல்லைக்குட்பபட்ட வார்டு எண்.09–ல் டி–புதூல் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

பொருள் எண்– 5

அரசாணை எண்.GO(MS) No.166 நாள்.23.11.2016–ன்படி திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் அரசினர் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் தனியார் மூலம் பணியினை மேற்கொள்ளும் பணிக்கு 2019–20–ஆம் கல்வி ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.15.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை 14வது நிதிக்குழு மான்யத்தில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.2582/2016/எச்1)

பொருள் எண்– 6

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –28 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.8408/2019/இ2 நாள்.11.06.2019–ல் மாநில பேரிடர் பொறுப்பு நிதியின் கீழ் இந்நகராட்சிக்கு பணிகள் மேற்கொள்ள ரூ.75.00 லட்சம் ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது, இந்நகர மன்ற தீர்மான எண்.275 நாள்.28.12.2018 மற்றும் தீர்மான எண்.01 நாள். 11.01.2019–ன்படி கீழ் கண்ட குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்யப்பட்டு வரிசை எண்.2,3,4,5,6,11,12,13,14,15,16,17 மற்றும் 20 ஆகிய பொது நிதியில் பட்டியல் தொகை வழங்கிய பணிகளுக்கும், வரிசை எண்.1,7,8,9,10,18,19 மற்றும் 21 ஆகிய பட்டியல் தொகை வழங்க உள்ள பணிகளுக்கும் மேற்கண்ட செயல்முறை உத்திரவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.75.00 லட்சத்தினை ஈடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | நகர மன்ற தீர்மான எண்& நாள். |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.02–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 2.00 | 01 /11.01.2019 |
| 2 | வார்டு எண்.09–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 2.50 | 01 /11.01.2019 |
| 3 | வார்டு எண்.11–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 2.50 | 01 /11.01.2019 |
| 4 | வார்டு எண்.06–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 4.50 | 01 /11.01.2019 |
| 5 | வார்டு எண்.20, பாலாஜி நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 5.00 | 01 /11.01.2019 |
| 6 | குமாரகுப்பத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 2.50 | 01 /11.01.2019 |
| 7 | வார்டு எண்.01–ல் புதியதாக 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 5.00 | 01 /11.01.2019 |
| 8 | வார்டு எண்.05–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 2.50 | 01 /11.01.2019 |
| 9 | வார்டு எண்.10–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 2.50 | 01 /11.01.2019 |
| 10 | வார்டு எண்.21–ல் புதியதாக 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி. | 5.50 | 01 /11.01.2019 |
| 11 | அமிர்தாபுரத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | 1.00 | 01 /11.01.2019 |
| 12 | எம்.ஜி.ஆர் நகரில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | 1.00 | 01 /11.01.2019 |
| 13 | நித்யா நகரில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | 1.00 | 01 /11.01.2019 |
| 14 | மேட்டுத் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | 1.00 | 01 /11.01.2019 |
| 15 | முருகூரில் உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்துதல் பணி | 1.00 | 01 /11.01.2019 |
| 16 | வார்டு எண்.14– பாரதி தெருவில் உள்ள உள்ள கிணற்றினை தூர்வாரி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் பணி. | 2.50 | 01 /11.01.2019 |
| 17 | எம்.ஜி,ஆர் நகரில் உள்ள கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் பணி. | 2.00 | 275/28.12.2018 |
| 18 | திருத்தணி நகர பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 | 01 /11.01.2019 |
| 19 | திருத்தணி நகர பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 | 13/31.01.2019 |
| 20 | திருக்குளம் மற்றும் நரசிம்ம சாமி கோயில் தெருவில் HDPE தொட்டி அமைத்தல் பணி. | 1.00 | 01 /11.01.2019 |

| | | | |
|---|---|---|---|
| **21** | நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் குழாய் மற்றும் மின் மோட்டார்கள் பராமரிப்பு பணி செய்தல். | **10.00** | **13/31.01.2019** |
| | **மொத்தம்** | **75.00** | |

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரிசை எண்.2,3,4,5,6,11,12,13,14,15,16,17 மற்றும் 20 ஆகிய பொது நிதியில் பட்டியல் தொகை வழங்கிய பணிகளுக்கும், வரிசை எண்.1,7,8,9,10,18,19 மற்றும் 21 ஆகிய பட்டியல் தொகை வழங்க உள்ள பணிகளுக்கும் மாநில பேரிடர் பொறுப்பு நிதியின் கீழ் இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.75.00 லட்சத்தினை ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

   (ந.க.எண்.57/2019/இ1)

**பொருள் எண்– 7**

இந்நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் குழாய் மற்றும் மின் மோட்டாரினை 2019–20–ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.

   (ந.க.எண்.191/2019/இ1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**